# அஞ்சனா பிலிம்ஸ்

# கைதியின் அகராதி

மலேஷியத் தமிழ் கலைஞர்கள் அனைவருக்கும் தாய்நாடாம் தமிழ்நாட்டில் தங்களது கலைத்திறனுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற தணியாத ஆவலும் ஏக்கமும் உண்டு.

அந்த ஏக்கத்தைத் தணிக்கும் வகையில் இயக்குனர் பரமேஷ்வர் அவர்கள் தன்னுடைய அஞ்சனா பிலிம்ஸ் சார்பில் பிரமாண்ட பொருட்செலவில் உருவாக்கியிருக்கும் படமே, கைதி இப்படம் **"கைதியின் அகராதி"** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு தாயின் பாசப்போரட்டாம் வன்முறையை கையிலெடுக்கும் ஒரு இளைஞன். சட்டத்தை காக்கக் துடிக்கும் நாயகன் என நவரசங்களும் இணைந்து போட்டிபோடும் கதையம்சம் உணர்ச்சி போராட்டமாய் விளங்கும் கதை.

முழுக்க முழுக்க மலேஷியத் தமிழ் கலைஞர்கள் நடித்து, மலேஷியாவிலேயே உருவாகியிருக்கும் இப்படத்தில் தமிழகத்தைச் சேர்ந்த "வில்லன் நடிகர் வரதராஜ்", குழந்தைகளைக் கடத்தி பணம் பறிப்பதும், பணம் கொடுக்க மறுத்தால் குழந்தைகளைக் கொடூரமாக கொலை செய்யும் கொடூரமான வில்லன் பாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

அதோடு நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை அடிவாரத்தில் படமாக்கப்பட்டுள்ள "வெத்தல வெத்தல" என்னும் குத்துப்பாட்டுக்கு "மைனா" புகழ் நாகுவுடன் ஆட்டம் போட்டு அசத்தியுள்ளார். இப்பாடலை எழுதிய ரா.பன்னீர்செல்வம் இப்படத்திற்கு வசனமும் எழுதியிருக்கிறார்.

மலேஷிய இசைஅமைப்பாளர் ஷாமன் இசையமைக்க இயக்குனர் பரமேஷ்வரின் உதவியாளர் சீனு இயக்கியுள்ள இப்படம் சென்சார் பணிகளுக்கு அனுப்பப்பட்டு, இம்மாதம் திரைக்குவர இருக்கிறது.

மலேஷியாவில் உருவாகி தாய்மண்ணில் தவழவிருக்கும் "கைதியின் அகராதி" தமிழ் ரசிகர்களுக்கு ஓர் புதுமை விருந்தாய் திரையில் ஜொலிக்கவிருக்கிறது.

# <u>தொழிற்நுட்ப கலைஞர்கள்</u>

| | | |
|---|---|---|
| திரைகதை மற்றும் தயாரிப்பாளர் | - | பரமேஷ்வர் |
| கதை மற்றும் இயக்கம் | - | சீனு |
| வசனம் | - | பன்னீர்செல்வம் |
| ஒளிப்பதிவு | - | நாகு, ஜிம்மி ஜிப் பாபு |
| இசை | - | ஷாமன் |
| பாடல்கள் | - | ஷாமன், பன்னீர்செல்வம் |
| மக்கள் தொடர்பு | - | **S.** செல்வரகு |
| தயாரிப்பு நிர்வாகம் | - | **P.**வைத்தி |